RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 17 ஜனவரி.23 2026 வெள்ளிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையட்டும்! வெற்றி முழக்கம் எட்டுத் திக்கும் ஒலிக்கட்டும் : முதலமைச்சர் மடல்!

சென்னை, ஜன.23-

வீரவணக்கம் வெற்றி முழக்கம்! என்ற தலைப்பில் நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மடல் எழுதியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

'செந்தமிழைக் காப்பதற்குச் சேனை ஒன்று தேவை' என்று நம் தாய்மொழியாம் தமிழ்மொழியை, இந்தி ஆதிக்கத்திடமிருந்து காத்திடப் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய உணர்ச்சிமிக்க கவிதை வரிகள்தான் ஏறத்தாழ 90 ஆண்டுகளுக்கு முன், தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஊரிலும் ஊர்வலப் பாட்டாக ஒலித்தது.

அப்போது, 14 வயது பள்ளி மாணவனாக இருந்த நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள், தன் கையில் தமிழ்க்கொடி ஏந்தி, 'ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள், நீ தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே' என்று முரசு கொட்டி, தன் வயதையொத்த மாணவர்களுடன் தேரோடும் திருவாரூர் வீதிகளில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஊர்வலமாகச் சென்றார்.

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் உள்ளிட்ட எண்ணற்ற தமிழறிஞர்களும் ஊட்டிய அந்த உணர்வு இன்று வரை நம் உள்ளத்தில் தீயாகக் கனன்று கொண்டிருக்கிறது. அன்று பள்ளி மாணவராக முத்தமிழறிஞர் கலைஞர் உயர்த்திப் பிடித்த தமிழ்க்கொடியின் நோக்கம் என்னவோ, அதுதான் இன்று நம் கைகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இருவண்ணக் கொடியாக உயர்ந்து நிற்கிறது. 'இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்' என்று டெல்லியை நோக்கி முழக்கமிடச் செய்கிறது.

மொழியும் இனமும் கழகத்தின் இரு கண்கள். அவற்றின் உரிமைகளைக் காப்பதற்காக உருவானதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். மொழிக்காக உயிரையே மாய்த்துக் கொண்ட தீரமிக்க தொண்டர்களின் கோட்டம் இது. இப்போதும் அதிகார மனப்பான்மையுடன் ஒன்றிய அரசு இந்தியைத் திணிக்கும் வேலையைத் தொடர்ந்து செய்கிறது. பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்த இருமொழிக் கொள்கைக்கு மாற்றாக, இந்தியைத் திணிக்கும் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் கல்விக்கான நிதியைத் தருவோம் என்று தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது.

தமிழ்மொழியின் மீது இந்தி ஆதிக்கத்தையும், தமிழர்களின் பண்பாட்டின் மீது மதவெறிக் கலவரங்களையும் முன்னெடுத்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் தடைக்கற்களையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து போட்டு வருகிறது. எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றைத் தகர்த்தெறியும் தடந்தோள்கள் எங்களுக்கு உண்டு என்ற உறுதியுடன், உங்களில் ஒருவனான என் தலைமையிலான அரசும், எனக்கு உறுதுணையாக நிற்கும் அன்பு உடன்பிறப்புகளான நீங்களும் எதிர்கொண்டு நிற்கிறோம்.

தமிழ்நாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க அரசு தொடர்ந்து செய்து வரும் வஞ்சகத்தைத் தட்டிக் கேட்கும் துணிச்சலும், நிமிர்ந்து நின்று எதிர்க்கும் முதுகெலும்பும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உண்டு. எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வும் அதிலிருந்து உதிர்ந்த இலை தழை சருகுகளும் பழைய வழக்குகளின் கோப்புகள் தூசு தட்டப்படும் சத்தம் கேட்டதுமே, பயந்து நடுங்கி, டெல்லிக்கு ஓடி பா.ஜ.க.வின் பாதம் பணிந்து நின்று விடுகின்றன.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவைகளாகிவிட்ட அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமானவரித்துறை இன்னும்



உள்ள புலனாய்வு அமைப்புகளை வைத்துத் தி.மு.க.வினரையும் முடக்கிவிடலாம் என்கிற சதித்திட்டம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. நாம் பணிய மாட்டோம். துணிந்து நிற்போம். இனம் மொழி நிலம் காத்திடும் போரைத் தொடர்ந்திடுவோம்.

பாசிசப் படையை எதிர்க்கும் சமூகநீதி ஜனநாயகப் படையாகத் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் களத்திற்கு ஆயத்தமாகி விட்டது. அதற்கான முரசு கொட்டும் நிகழ்ச்சியாக, ஜனவரி 20ஆம் நாள் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அமைந்துள்ளன.

திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையட்டும்! வெற்றி முழக்கம் எட்டுத் திக்கும் ஒலிக்கட்டும் : முதலமைச்சர் மடல்!

கழகத்தின் இளைஞர்களும் மகளிரும் இந்தத் தேர்தல் களத்தில் அணிவகுத்து ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து திட்டமிடப்பட்டுள்ளன. ஜனநாயகப் போர்க்களத்தின் முன்கள வீரர்களாக நியமிக்கப்பட்டள்ள பாக முகவர்கள், வாக்குச்சாவடிக் குழு உறுப்பினர்கள் மற்றும் டிஜிட்டல் முகவர்கள் ஆகியோருக்கான பயிற்சிக் களமும் மண்டல வாரியாகத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டைத் தலைகுனிய விடாமல், அனைத்து இலக்குகளிலும் மாநிலத்தை முன்னேற்றி வருகிற திராவிட மாடல் அரசின் சாதனைகளைத் தொகுதிகள் தோறும் முழங்குகின்ற பொதுக்கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

2021ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறுகிற பல்வேறு நலத்திட்டங்களைக் கழக அரசு செயல்படுத்தியுள்ளது. குறிப்பாக மகளிர் நலன் காக்கும் முன்னோடித் திட்டங்களை இந்தியாவின் பிற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறோம். இவற்றை மக்களிடம் வீடு வீடாகப் பரப்புரை செய்யும் 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' என்ற தலைப்பிலான மகளிர் குழுவினரின் பயணம் ஒவ்வொரு பாகத்திலும் பிப்ரவரி 1 முதல் பிப்ரவரி 8 வரை நடைபெறவுள்ளது.

'தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்' எனத் தொகுதிகள் தோறும் நடைபெறவுள்ள பொதுக்கூட்டங்கள் பிப்ரவரி 28 வரை நடைபெறவுள்ளன. அத்துடன், ஜனவரி 26 அன்று டெல்டா மண்டல வெல்லும் தமிழ்ப் பெண்கள் மகளிர் மாநாடு எழுச்சியுடன் நடைபெறவிருக்கிறது. பிப்ரவரி 7ஆம் நாள் விருதுநகரில் நடைபெறும் தென் மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பில் கழக இளைஞர்கள் அணிவகுக்க ஆயத்தமாகிவிட்டனர். மகளிர் படையையும், இளைஞர் பட்டாளத்தையும் உற்சாகப்படுத்தி உத்வேகமளித்திடும் வகையில் உங்களில் ஒருவனான நான் அந்த இரு நிகழ்வுகளிலும் பங்கேற்கிறேன்.

வீடு வீடாகப் பரப்புரை, தொகுதிகள் தோறும் பொதுக்கூட்ட முழக்கங்கள், களத்தில் நிற்கும் கழகத்தினருக்குப் பயிற்சிக் கூட்டங்கள் என பிப்ரவரி மாதம் முழுவதும் தேர்தல் களத்திற்கான முன்னோட்டப் பயணத்தைக் கழகம் மேற்கொள்ளும் நிலையில், அதன் முத்தாய்ப்பாகத் தீரர் கோட்டமாம் திருச்சியில் மார்ச் 8 அன்று, பத்து இலட்சம் உடன்பிறப்புகள் கூடுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு பேரெழுச்சியுடன் நடைபெறவிருக்கிறது. இப்படியொரு கொள்கைப் பட்டாளம் இந்தியாவில் எந்த இயக்கத்திலும் கிடையாது என்பதை உரக்கச் சொல்லிடும் வகையில், உடன்பிறப்புகளின் திருச்சி வருகையை உங்களில் ஒருவனான நான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

ஜனநாயகப் போர்க்கள வீரர்களான உடன்பிறப்புகளுக்கு ஓய்வில்லை. உங்களை வழிநடத்தும் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள உங்களில் ஒருவனான எனக்கு ஓய்வுமில்லை உறக்கமுமில்லை.

நம் உடன்பிறப்புகள் தேர்தலுக்கான கட்சி அரசியல் வேலைகளை மட்டும் செய்யவில்லை. ஒவ்வொரு குடிமக்களின் ஜனநாயக ஆயுதமான வாக்குரிமையைப் பாதுகாக்கும் பணியையும் களத்தில் நின்று நிறைவேற்றியிருக்கிறார்கள்.

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அடிக்கடி சொன்னதுபோல, நாம் எதிர்கொள்கின்ற 2026 தேர்தல் களம் ஆரிய திராவிடப் போரின் மற்றொரு களம். அந்தக் களத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் சமூகநீதி மதநல்லிணக்கம் மாநில உரிமைகளை இலட்சியமாகக் கொண்ட கொள்கைக் கூட்டணி வலிமையுடன் களத்தில் நிற்கிறது. தமிழ்ப் பண்பாட்டை அழிக்க நினைக்கும் அரசியல் எதிரிகளையும், அந்த எதிரிகளின் கூலிப்பட்டாளமாகிவிட்ட அடிமைகளையும் எதிர்கொண்டு வெற்றியை உறுதி செய்யும் களம்.

போர்க்களம் காணும் படை வீரர்கள் தங்களின் நாட்டைக் காத்திட உறுதியேற்பது வழக்கம். ஜனநாயகக் களம் காணும் கழகத்தின் இலட்சிய வீரர்களான உடன்பிறப்புகள், ஜனவரி 25 அன்று மாநிலம் முழுவதும் நடைபெறவுள்ள மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்களில் பங்கேற்று, தமிழ் இன மொழி எதிரிகளான பா.ஜ.க.வையும் அதன் அடிமைக் கூட்டணியையும் வீழ்த்திட உறுதியேற்க வேண்டும்.

உங்களில் ஒருவனான நான், தமிழ்மொழி காத்திடும் அறப்போரில் தங்கள் இன்னுயிரை ஈந்த தியாகிகளாம் தாளமுத்து நடராசன் நினைவிடத்தில் வீரவணக்கம் செலுத்தி உறுதியேற்க இருக்கிறேன். பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் நடைபெறும் வீரவணக்க நாள் கூட்டத்தில் உரையாற்றுகிறேன்.

வீரவணக்கத்துடன் தொடங்கும் கழக உடன்பிறப்புகளின் அணிவகுப்பும் களப்பணியும் 2026 சட்டமன்றத் தேர்தல் நிறைவு பெறும் வரை ஓய்வின்றிச் செல்லட்டும். தொய்வின்றித் தொடரட்டும். மகத்தான வெற்றியுடன் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையட்டும்! கழகத்தின் வெற்றி முழக்கம் எட்டுத் திக்கும் ஒலிக்கட்டும்!

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## "பிரிவினையைத் தூண்டும் உதயநிதியை பதவியிலிருந்து நீக்க வேண்டும்" பியூஷ் கோயல்

சென்னை, ஜன.23-

"உதயநிதி ஸ்டாலினின் தேசத்துக்கு எதிரான வெறுப்பு பேச்சை உயர் நீதிமன்றம் கண்டித்துள்ளது. எனவே பிரிவினையைத் தூண்டும் உதயநிதி ஸ்டாலினை பதவியிலிருந்து முதல்வர் ஸ்டாலின் நீக்க வேண்டும்" என பாஜகவின் தமிழக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

பிரதமர் மோடி நாளை சென்னை வரவுள்ள நிலையில், இன்று தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்தார். சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள பழனிசாமியின் இல்லத்தில் பியூஷ் கோயல் காலை உணவு அருந்தினார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த பியூஷ் கோயல், ' ஊழல் நிறைந்த திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்பி தேசிய ஜனநாயக



கூட்டணி ஆட்சிக்கு வரும். திமுக ஆட்சியில் ஊழலை தவிர வேறு எதுவும் நடக்கவில்லை என அனைத்து தரப்பு மக்களும் புரிந்து கொண்டனர். வளர்ச்சிக்கு எதிரான திமுக அரசு மக்கள் நலனுக்காக எதையும் செய்யவில்லை. திமுகவின் குடும்ப ஆட்சியில் விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்

உதயநிதி ஸ்டாலினின் தேசத்துக்கு எதிரான வெறுப்பு பேச்சை உயர் நீதிமன்றம் நேற்று கண்டித்தது. எனவே உதயநிதி ஸ்டாலினை பதவியிலிருந்து முதல்வர் ஸ்டாலின் நீக்க வேண்டும். உதயநிதியின் பேச்சு தமிழகத்தில் பிரிவினையை தூண்டி, சமூகங்களுக்கு இடையே பிளவை உருவாக்கும் வகையில் உள்ளது.

நாளை பிரதமர் தமிழகத்துக்கு வருகை தருகிறார். மேலும், மிகப்பெரிய பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்கிறார். இக்கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் உட்பட தேசிய ஜனநாயக கூட்டணியின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

2026ல் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும்போது தமிழகம் மிகப்பெரிய வளர்ச்சியை அடையும். தமிழ் கலாச்சாரம், தமிழின் பெருமை ஆகியவற்றை நிலைநிறுத்தி, தமிழகத்தை நம்பர் ஒன் மாநிலமாக மாற்றுவோம்" என்றார்.

present sale for all over Tamil Nadu
தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## சட்டப்பேரவையில் எதிரொலித்த கறிக்கோழி விவசாயிகள் விவகாரம்: அதிமுக வெளிநடப்பு

சென்னை, ஜன.23-

கறிக்கோழி விவசாயிகள் விவகாரம் குறித்து அதிமுக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்த நிலையில், "பதில் தயாரானதும் அது குறித்து விவாதிக்கலாம்" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்ததையடுத்து அதிமுகவினர் வெளிநடப்பு செய்தனர்.



கடந்த சில நாட்களாக கோழி இறைச்சியின் விலை பல மடங்கு உயர்ந்திருப்பதால், அசைவ பிரியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களாக ஒரு கிலோ கோழி இறைச்சி ரூ.200 என்ற விலையில் இருந்து வந்தது. தற்போது பல மடங்கு அதிகரித்து சுமார் ரூ.380 வரை எட்டியுள்ளது. கோழித் தீவனத்தின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் விலையேற்றம் என கடைக்காரர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில், சட்டப்பேரவையில் கறிக்கோழி விவகாரம் தொடர்பாக அதிமுக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தது. பின்னர் இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை எடுக்க வலியுறுத்தி சட்டப்பேரவையில் அதிமுக எம்எல்ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர். ஆனால் அதிமுகவின் கவன ஈர்ப்பு தீர்மானத்தை எடுக்க சபாநாயகர் அப்பாவு அனுமதி மறுத்ததால், எம்எல்ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

பின்னர் இது குறித்து முதல்வர் ஸ்டாலின் பதிலளித்தார். அப்போது அவர் பேசும்போது, "கறிக்கோழி விவகாரம் குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்களிடம் கலந்து ஆலோசித்து பதில் கிடைத்த பிறகு, நாளை விவாதிக்கலாம். இப்போது நேரத்தை வீணடிக்க வேண்டாம்" என்று தெரிவித்தார். இருப்பினும் அதிமுகவினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வெளிநடப்பு செய்தனர்.

முன்னதாக நேற்று இபிஎஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தமிழகத்திலுள்ள 'கறிக்கோழி பண்ணை விவசாயிகள்' கறிக்கோழி விற்கும் நிறுவனங்களுடன் ஒப்பந்த அடிப்படையில் கூலிக்கு கோழி வளர்ப்பு தொழில் செய்து வருகிறார்கள்.

உணவு மற்றும் மூலப்பொருட்கள், மின் கட்டண உயர்வு உள்ளிட்ட அனைத்தும் பல மடங்கு உயர்ந்துவிட்ட நிலையில் தற்போது இந்நிறுவனங்கள் வளர்ப்பு கூலியாக வழங்கும் கிலோ ஒன்றுக்கு 6 ரூபாய் 50 பைசாவை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கடந்த 6 மாதங்களாக பல கட்டப் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

தங்களது போராட்டங்களினால் எந்த வித பயனுமில்லாததால், 1.1.2026 முதல் உற்பத்தி நிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்று பண்ணையாளர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து திமுக அரசு 21.1.2026 அன்று முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெறும் என்று கூறியது. இந்நிலையில் விடியா திமுக அரசு இம்மாத ஆரம்பத்தில் 10 நிர்வாகிகளை எந்த வித காரணமுமின்றி கைது செய்தது.

முத்தரப்பு பேச்சுவார்த்தை தோல்வி அடைந்த நிலையில், கறிக்கோழி பண்ணை நிர்வாகிகளை (விவசாயிகளை) காவல்துறை மீண்டும் கைது செய்துள்ளதாக செய்திகள் வருகிறது. கைதுசெய்யப்பட்ட நிர்வாகிகளை உடனடியாக விடுவிப்பதுடன், அவர்களது பிரச்சனைக்கு சுமூக தீர்வு காண முதல்வரை வலியுறுத்துகிறேன்." என்று குறிப்பிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.




■ மதுரை மாவட்டம், ஹோட்டல் கோர்ட்யார்ட் மேரியாட்டில் தொல்லியல் துறை சார்பில், தமிழ்நாடு அகழாய்வுகளில் அண்மைக்கால அறிவியல் ஆய்வுகள் என்ற தலைப்பில் நடைபெறும் பன்னாட்டுக் கருத்தரங்கினை நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்து, புத்தகங்களை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.,தலைவர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர்/சிந்து வெளி ஆய்வு மைய மதிப்புறு ஆலோசகர் முனைவர் ஆர். பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.,(பணிநிறைவு) , மாநகராட்சி துணை மேயர் தி.நாகராஜன் ,தமிழ்நாடு தொல்லியல்துறை கல்வி மற்றும் ஆய்வு ஆலோசகர் பேராசிரியர் கா.ராஜன் அவர்கள், தொல்லியல்துறை இணை இயக்குநர் முனைவர் இரா. சிவானந்தம் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ கர்நாடக மாநிலம் மங்களூரில் 85 வது அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகளப்போட்டி (12.1.2026 முதல் 16.1 2026 வரை) நடைபெற்றது. இந்த போட்டியில் மதுரை மாவட்டம் சிறப்பு சார்பு காவல் ஆய்வாளர் மகாதேவியின் மகளும், ஆயுதப்படை அத்லெட்டிக் கிளப்பில் பயிற்சி பெற்று வரும் பமிலவர்ஷினி நீளம் தாண்டுதல் போட்டியில் மூன்றாம் இடம் பிடித்து வெண்கல பதக்கம் பெற்றார். இவரை மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் B. K அரவிந்த் இ. கா. பா நேரில் அழைத்து மாணவியையும் மற்றும் பயிற்சியாளர் B. சந்துரு தலைமை காவலரை பாராட்டினார்.



■ வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி அவர்கள் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் குடியாத்தம் நகராட்சி புதுப்பேட்டை திருவள்ளூர் அரசு நிதி உதவி தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் குறித்து ஆய்வு மேற்கொண்டு மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் காலை உணவினை சாப்பிட்டு பார்த்து தரத்தினை ஆய்வு செய்தார் இந்த ஆய்வின் போது குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் சுப்புலட்சுமி உடன் இருந்தனர்..



■ தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், அணைக்கரைப்பட்டி ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



■ தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் லெட்சுமிபுரம் ஊராட்சியில் இன்று உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பயனடைந்து வரும் நலத்திட்டங்கள் குறித்தும், பொதுமக்களின் கருத்துக்கள் குறித்தும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகள் குறித்தும் பொதுமக்கள் விண்ணப்படிவங்களில் பூர்த்தி செய்து, தன்னார்வலர்களிடம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்தி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.கோவிந்தராவ் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ் ஜீத் சிங், முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.





# கீழக்கோட்டையில் வானவில் மன்ற அறிவியல் கணித எளிய ஆய்வகச் சோதனைகள்

காளையார் கோவில், ஜன.23-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை ப்பள்ளி கீழக்கோட்டையில் வானவில் மன்ற அறிவியல் கணித செயல்பாடுகள் குறித்த ஆய்வகச் சோதனைகள் நடை பெற்றது. தலைமை யாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். வானவில் மன்ற இணை ஒருங்கிணைப்பாளர் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்து அனை வரையும் வரவேற்றார். அறிவியல் மற்றும் கணித செயல்பாடுகளை வானவில் மன்ற ஸ்டெம் கருத்தாளர் ஜெயப்பிரியா செய்து காண்பித்து மாணவ மாணவிகளையும் செய்து ப்பார்க்க ஊக்குவித்தார். நீர் தெளி ப்பான் எளிய காற்றாடி காய்கறி பழ மின்கலம் தமிரத் தகட்டை சுத்தம் செய்தல் கணிதத்தில் வடிவியலில் இயற்கணிதம் போன்ற செயல்பாடுகள் செய்வதில் மாணவ மாணவிகள் பயிற்சி பெற்றனர். மாணவ மாணவிகள் ஆர்வமுடன் வகுப்பறையில் செய்த செயல்பாடுகளை தானே செய்து பார்த்து மகிழ்ந்தனர். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா ஆசிரியைகள் வாசுகி கமலம்பாய் கணினி பயிற்றுநர் வித்யா சத்துணவு உதவியாளர் அஞ்சலை கஸ்தூரி கலந்து கொண்டனர்.

# நோயாளி வந்த 30 நிமிடத்திற்குள் நோயை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் அதிநவீன வசதிகளுடன் அவசர சிகிச்சை பிரிவு: சென்னை கிளெனிகல்ஸ் மருத்துவமனையில் திறப்பு

## தாம்பரம் போக்குவரத்து போலீஸ் துணை கமிஷனர் துவக்கி வைத்தார்




பெரும்பாக்கம், ஜன.23-

சென்னை அடுத்த பெரும்பாக்கத்தில், 22 ஜன. 2026 போர்டிஸ் ஹெல்த்கேர் குழுமத்தின் ஒரு அங்கமான கிளெனீகல்ஸ் மருத்துவமனை, இன்று தனது அதிநவீன அவசர சிகிச்சை பிரிவை திறந்தது. இங்கு மருத்துவ அவசர காலங்களில் மிக விரைவாகவும், சரியான முறையில் சிகிச்சை அளிக்கப்பட உள்ளது. இந்த பிரிவை தாம்பரம் போக்குவரத்து போலீஸ் துணை கமிஷனர் சமய் சிங் மீனா, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கிளெனீகல்ஸ் மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி பரத் காந்த் ரெட்டி, தலைமை செயல்பாட்டு அதிகாரி எஸ். நிரஞ்சனி மற்றும் அவசர சிகிச்சை பிரிவுத் தலைவர் டாக்டர். ஸ்ரீராம் உள்ளிட்ட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

புதிய அவசர சிகிச்சை பிரிவு 19 படுக்கை வசதிகளுடன், நோயாளிகளை விரைவாகப் பரிசோதித்து சிகிச்சை அளிக்கும் வகையில் வடிவமைப்பட்டுள்ளது. இதில் 18 படுக்கைகள் தீவிர சிகிச்சைக்காகவும், 1 படுக்கை பிரத்யேக மாகத் தொற்று நோய்க ளுக்காக வும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது செப்சிஸ் மற்றும் காற்று வழியாகப் பரவும் கிருமித் தொற்றுகளைப் பாதுகாப்பாகக் கையாள உதவும். இங்கு நோயா ளியை வேறு இடத்திற்கு கொண்டு செல்லாமலேயே, படுக்கையின் அருகிலேயே எக்ஸ்ரே மற்றும் அல்ட்ராச வுண்ட் ஸ்கேன் எடுக்கும் வசதிகள் உள்ளன. இதனா ல் மருத்துவர்கள் நோயா ளியின் நிலைமையை உடனுக்குடன் அறிந்து, விரைவான முடிவுகளை எடுக்க முடியும்.

இந்நிகழ்ச்சியில் பேசிய சமய சிங் மீனா கூறுகையில், “சாலை விபத்துகள் இன்றும் பல குடும்பங் களுக்கும், அவசரக் கால சேவைக ளுக்கும் பெரும் சுமையாக மாறி வருகின்றன. கடந்த ஆண்டு ஜூன் மாதம் வெளியான மாநில அரசின் அறிக்கையின்படி, ஒரு நாளைக்கு சராசரியாக 191 விபத்துகளும், 48 உயிரிழப்புகளும் ஏற்படு கின்றன. அதற்கு முந்தைய ஆண்டைவிட உயிரிழ ப்புகள் 11.64 சதவீதம் குறைந்திருந்தாலும், இந்த எண்ணிக்கை இன்னும் கவலைக்குரியதாகவே உள்ளது. சென்னையில் 2,016 விபத்துகளும், அதைத் தொடர்ந்து தாம்பரத்தில் 995 விபத்துகளும் பதிவாகியுள்ளன. விபத்துத் தடுப்பு நடவடிக்கைகளுடன் சேர்ந்து, விபத்து நடந்த முதல் ஒரு மணி நேரத்தில் உயிரைக் காக்கும் இதுபோன்ற அவசர சிகிச்சை வசதிகள் மிகவும் அவசியமானவை.” என்றார்.

சென்னை மற்றும் ஐதராபாத் மருத்துவம னைகளின் தலைமைச் செயல் அதிகாரி பரத் காந்த் ரெட்டி கூறுகையில், “நோயாளிகளுக்கு முதலில் என்ன தேவை என்பதன் அடிப்படையிலேயே இந்த அவசர சிகிச்சைப் பிரிவை நாங்கள் திறந்துள்ளோம். இங்கு விரைவான பரிசோதனை, தெளிவான சிகிச்சை முறைகள் மற்றும் தேவைப்படும்போது பாதுகாப்பான தனிமைப் படுத்துதல் ஆகியவை உள்ளது. கிருமித் தொற்றைத் தடுக்கும் வடிவமைப்பு மற்றும் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருக்கும் வசதிகளுடன், நோயாளி மருத்துவமனைக்கு வந்த நிமிடத்தில் இருந்தே அவர்களுக்கு வேகமாகவும், பாதுகாப்பாகவும், பொறுப்புணர்வுடனும் சிகிச்சை அளிப்பதே எங்கள் முக்கிய குறிக்கோள் ஆகும்“ என்று தெரிவித்தார்.

சென்னை கிளெனீகல்ஸ் மருத்துவ மனையின் தலைமை செயல்பாட்டு அதிகாரி மற்றும் மருத்து வமனைத் தலைவர் எஸ். நிரஞ்சனி கூறுகையில் “இந்த அவசர சிகிச்சைப் பிரிவு, நோயாளியின் படுக்கையின் அருகிலேயே உடனடி மருத்துவ முடிவுகளை எடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உயிர்காக்கும் சிகிச்சை வசதிகள் மற்றும் நோயாளியைத் தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகள் இருப்பதால், மருத்துவக் குழுவினரால் நோயாளியின் நிலையை விரைவாகக் கணித்து சிகிச்சையைத் தொடங்க முடியும். சரியான மருத்துவ முறைகளைப் பின்பற்றி, நோயாளி வந்த 30 நிமிடங்களுக்குள் முக்கிய மருத்துவ முடிவுகளை எங்களால் எடுக்க முடியும் என்பதே இதன் சிறப்பு அம்சம் ஆகும்“ என்று தெரிவித்தார்.

சென்னை கிளெனீகல்ஸ் மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவுத் தலைவர் டாக்டர். ஸ்ரீராம் கூறுகையில் “சிகிச்சைகள் தடையின்றி நடக்கும் வகையில் இந்தப் புதிய பிரிவு வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு பிரத்யேக உயிர்காக்கும் அறைகள், சிறிய சிகிச்சைகளுக்கான அறைகள் மற்றும் அவசர நேரத்தில் நோயாளிகளைத் தொடர்ந்து கண்காணிக்கும் வசதியுடன் கூடிய மையப்படுத்தப்பட்ட செவிலியர் பிரிவு ஆகியவை உள்ளன.” என்றார்.

‘ஒவ்வொரு நிமிடமும் முக்கியம்‘ என்பதை உணர்ந்து செயல்படும், மிகவும் நம்பகமான அவசர சிகிச்சை மையமாகத் திகழ வேண்டும் என்ற மருத்துவமனையின் நோக்கத்தை பிரதிபலிக்கும் விதமாக இந்த புதிய பிரிவு திறக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் இம்மருத்துவமனை தனது அவசர சிகிச்சை கட்டமைப்பை மேலும் மேம்படுத்தியுள்ளது. சிறந்த மருத்துவ நிபுணத்துவம், நவீன தொழில்நுட்பம் மற்றும் நோயாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வடிவமைப்பு ஆகியவற்றை இணைத்து சிறந்த மருத்துவத் தீர்வுகளை இது வழங்க இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.




■ கிருஷ்ணகிரி அணை, பெரியமுத்தூரில் செயல்பட்டு வரும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன பயிற்சி மையத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நில அளவை பதிவேடுகள் துறை சார்பாக, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நில அளவை பதிவேடுகள் துறைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட நில அளவர்கள் மற்றும் வரைவாளர்களுக்கான நில அளவை பயிற்சியை மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ் குமார் துவக்கி வைத்து உரையாற்றினார். உடன், உதவி இயக்குநர்கள் (நில அளவை) ராஜ்குமார், அருள், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன முதல்வர் மாலதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், சென்னத்தூரில், சமூக பொறுப்பு நிதியுதவியுடன் அரசு புறம்போக்கு நிலங்களை குறுங்காடுகளாக மாற்றும் திட்டத்தின் ஒரு பகுதியாக டைட்டன் நிறுவனம் மற்றும் பயோட்டாசோயில் ஃபவுண்டேஷன் இணைந்து டைட்டான் வனம் திட்டம் மூலம் முதல்கட்டமாக 33 ஏக்கர் பரப்பளவில் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



# தேனி நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளராக செந்தில்குமார் நியமனத்தை திரும்ப பெற வலியுறுத்தி சுமை பணியாளர் சங்கத்தினர் உள்ளிருப்பு போராட்டம்

தேனி, ஜன.23-

தேனி மாவட்டம் பழனிசெட்டிபட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம். இங்கு மண்டல மேலாளராக பாலமுருகன் என்பவர் பணிபுரிந்து வந்தார். கடந்த சில நாட்களுக்கு முன்பு பணியிட மாற்றம் செய்யப்பட்டார். ஏற்கனவே கடந்த 6 மாதங்களுக்கு முன்பு இங்கு மண்டல மேலாளராக பணிபுரிந்து பல்வேறு சர்ச்சைகளுக்கு ஆளாகி வேறு மாவட்டத்திற்கு செந்தில் குமார் என்பவர் பணியிடம் மாற்றம் செய்யப்பட்டார். இந்த நிலையில் மீண்டும் மண்டல மேலாளராக செந்தில்குமார் தேனி மாவட்டத்திற்கு பணியிடம் மாற்றபட்டு ஜன 21ல் பணி சேர இருந்தார். இந்த தகவலை தெரிந்து கொண்ட சுமை பணியாளர்கள் சங்கம் தேனி மாவட்ட தலைவர் வேல்முருகன், மாவட்ட செயலாளர் முருகன், மாவட்ட பொருளாளர் மணிகண்டன் மற்றும் ஐஎன்டியூசி மாவட்ட செயலாளர் குமரேசன் தலைமையில் தேனி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் பணியில் உள்ள சுமை பணியாளர்கள் அலுவலகம் முன்பு புதிதாக மண்டல மேலாளராக செந்தில்குமார் நியமிக்கப்பட்டத்தை தமிழக அரசும், தேனி மாவட்ட நிர்வாகமும் திரும்ப பெற வேண்டும். செந்தில்குமார் என்பவருக்கு பதிலாக நேர்மையான அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என கோரி பணியை புறக்கணித்து உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் போராட்டகாரர்கள் கூறுகையில் ஏற்கனவே மண்டல மேலாளராக தேனி மாவட்டத்தில் செந்தில்குமார் பணியில் இருந்த போது பல்வேறு மாவட்டங்களில் மிகவும் மோசமாக இருக்கக்கூடிய அரிசி மூட்டைகளை வாங்கி வந்து தேனி மாவட்டத்தில் பொது மக்களுக்கு வழங்கி வந்தார் மேலும் நிர்வாகத் துறையில் பல்வேறு மோசடி வேலைகளிலும் ஈடுபட்டு வந்தார் . ஆகவே அவர் தேனி மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டத்திற்கு பணி மாறுதல் பெற்று சென்று மீண்டும் தேனி மாவட்டத்திலேயே பணியை தொடர்ந்தால் பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய அரிசியின் தரம் முற்றிலும் மாறுபட்டு பல்வேறு மோசடி செயல்களிலும் ஈடுபடுவார் ஆகவே இவரை தேனி மாவட்ட மண்டல மேலாளராக நியமித்ததை தமிழக அரசும் தேனி மாவட்ட நிர்வாகமும் திரும்ப பெற்று இதற்குப் பதிலாக நேர்மையான அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.





# காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் நடுநிலைப் பள்ளியில் மகிழ்முற்றம் நிகழ்ச்சி

காளையார் கோவில், ஜன.23-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சேம்பாரில் மகிழ் முற்றம் நிகழ்ச்சி தலைமை ஆசிரியர் சுரேஷ் தலை மையில் நடைபெற்றது. ஒவ்வொரு மாதமும் அணிகளின் செயல்பா டுகளுக்கு வழங்கப்படும் மதிப்பெண் அடிப்படையில் , வெற்றி பெற்ற அணிக்கு ஊக்க பரிசுகள் வழங்கப்படும். டிசம்பர் மாதத்திற்கான செயல்பாடுகளான மாணவர்கள் வருகை, கற்றல் திறன், மன்ற செயல் பாடுகள், கலைத் திருவிழா, சமத்துவ பொங்கல் விழா போட்டிகள் போன்றவற்றிற்கு ஒவ்வொரு அணியினருக்கும் தனித்தனியாக மதிப்பெண் வழங்கப்பட்டது. பாலை அணி முதலிடத்தையும் மருதம் அணி இரண்டாம் இடமும், மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் இடம் முறையேமுல்லை,



குறிஞ்சி, மற்றும் நெய்தல் ,அணிகள் பெற்றன. முதலிடம் பெற்ற பாலை அணிக்கு சுழற் கோப்பையும் ஊக்கப் பரிசு வழங்கப்பட்டது. மேலும் தலைமை ஆசிரியர் சுரேஷ், மகிழ் முற்றத்தின் நோக்கங்களான கற்றல் திறன்களை மேம்படு த்துதல், அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை ஊக்குவித்தல், அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்புகள் அளித்தல், தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல், மற்றும் ஆசிரியர் மாணவர் உறவுகளை வலுப்படு த்துதல் போன்றவற்றை எடுத்துரைத்தார். டிசம்பர் மாதத்தில் முதலிடம் பிடித்த பாலை அணியின் தலைவர் நித்யஸ்ரீ கொடியேற்றி சிறப்புரையாற்றினார். அணியின் தலைவர் நித்யஸ்ரீ மற்றும் பொறுப்பாசிரியர் முத்துக்குமார் இருவரும் சுழற் கோப்பையை பெற்றுக் கொண்டனர். பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் நன்றியுரை கூறினார். ஆசிரியர்கள் காளீஸ்வரன்,முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதிமலர் மற்றும் தனபாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், சத்துணவு பொறுப் பாளர்கள், காலை சிற்றுண்டி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரையில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் குடியரசு தின கிராமசபை கூட்டம் மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

மதுரை, ஜன.23-

மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் குடியரசுதினமான 26.01.2026ம் தேதியன்று கிராம சபை கூட்டம் நடைபெற உள்ளது.

குடியரசு தின கிராமசபைக் கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம், கிராம ஊராட்சிகளின் தணிக்கை அறிக்கை கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மக்கள் திட்டமிடல் இயக்கம் மூலம் 202627 ஆம் நிதியாண்டிற்கான கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் பெறுதல்



தொழிலாளர் வரவு செலவுத் திட்டப் பணிகள் நலிவுநிலை குறைப்பு நிதி தூய்மை பாரத இயக்கம், ஜல் ஜீவன் திட்டம், சிறு பாசன ஏரிகள் புதுப்பித்தல் குறித்த விவரம். தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர கூட்டப் பொருட்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

மேற்படி நடைபெறும் கிராம சபை கூட்டங்களில் அவ்வூராட்சியில் வாழும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வாக்காளர்களும் கலந்து கொள்வது முக்கிய கடமையாகும். மேலும் கிராம சபை விவாதங்களில் பயனாளிகள் தேர்வு மற்றும் அரசால் நிறைவேற்றப்படும். திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

எனவே மதுரை மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார்,இ.ஆ.ப., அறிவித்தார்.



# வெண்ணம்பள்ளி கிராமத்தில் அனைத்து சமுதாயம் மக்களும் பயன்பெறும் வகையில் சமுதாயக்கூடம்

## கட்டும் பணியினை பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் மு தம்பிதுரை பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி, ஜன.23-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வெண்ணம்பள்ளி மற்றும் சூரக்குட்டை ஆகிய கிராம மக்கள் பயன்பெறும் வகையில் வெண்ணம்பள்ளி கிராமத்தில் ஒரு சமுதாய கூடம் அமைக்கப்பட வேண்டும் என அப்போது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது வந்த கோரிக்கை நிறைவேற்றும் வகையில் முன்னாள் சபாநாயகரும், பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் மு தம்பிதுரை அவர்களின் தொகுதி மேம்பாட்டுதலில் இருந்து சுமார் 15 லட்ச ரூபாய் நிதி உதவிகள் செய்யப்பட்டது இதற்கான பூமி பூஜை வெண்ணம்பள்ளி கிராமத்து நடைபெற்றது,

இந்த விழாவில் கலந்து கொண்ட முன்னாள் சபாநாயகரும், பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் மு தம்பிதுரை அவர்களுக்கு வெண்ணம்பள்ளி மற்றும் சூரக்குட்டை ஆகிய கிராம மக்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது சூரன்குட்டை, வெண்ணம்பள்ளி ஆசிய கிராம மக்கள் பயன்பெறும் வகையில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கான பணிகளை டாக்டர் மு தம்பிதுரை பூமி பூஜை செய்து சமுதாய கூடம் கட்டுவதற்கான

பணிகளை தூக்கி வைத்தார்,

அப்போது முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் வி.சி. ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் ஜெயபாலன் மாணவரணி செயலாளர் வெற்றி செல்வன், எம். ஜி.ஆர். மன்ற ஒன்றிய இணைச் செயலாளர் மணி, இலக்கிய அணி ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, அதிமுக நிர்வாகிகள் வில்லியம், சீனிவாசன், அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர் கோவித்தராஜீ, கிளை செயலாளர் முருகன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் அகஸ்டின், சாமிநாதன் மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ராஜ்குமார் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த சுதாகர் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்

## முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சிங்கம்புணரி மற்றும் எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

# மொத்தம் ரூ2.83 கோடி மதிப்பீட்டில் புதிய சாலை அமைப்பதற்கான பணிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் துவக்கி வைத்தார்

சிவகங்கை, ஜன.23-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி மற்றும் எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிய சாலைகள் அமை ப்பதற்கான பணி களை, மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தலைமையில் துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலான பல்வேறு மக்கள் நலத்திட் டங்கள் செயல்படுத்துவது மட்டுமன்றி, தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் அடிப்படை வசதி மேம்பாட்டு பணிகள் மற்றும் பல்வேறு வளர்ச்சி பணிகள் துரிதமாக மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், சீரான வளர்ச்சி யையும், சமூக நீதியையும், ஜனநாயகத்தையும் தனது குறிக்கோளாக கொண்டு மக்கள் பணியாற்றிய பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமை யிலான தமிழக அரசு அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கி வருகிறது.

குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆக்கப்பூர்வமாக தமிழக த்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், பல்வேறு நலத்திட்டங்கள் வா யிலாக கல்வி, தொழில், வேளாண், வேலைவாய்ப்பு, சட்டம் ஒழுங்கு, தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட அனைத்திலும் சிறந்து விளங்கி, பிற



மாநிலங்கள் மட்டுமன்றி, பிற நாடுகளுக்கும் அத்திட் டங்கள் முன்மாதிரியாக திகழ்ந்து வருகிறது.

மேலும், பொருளாதார வல்லுநர்களின் கணக்கெ டுப்பின்படி, இந்தியாவில், தமிழகம் 11.19 சதவீதம் பொருளாதார வளர்ச்சியில் சிறந்து விளங்கி வருகிறது. அதுமட்டுமின்றி பண்பாடு, கலாச்சாரம், மொழி ஆகியவைகளை போற்றி பாதுகாத்திடும் அரசாக தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான அரசு சிறந்து விளங்கி வருகிறது.

பொதுமக்களின் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்திடும் வகையில், நகரங்களுக்கு இணையாக அனைத்து அடிப்படை வசதிகளையும் கிராமப் புறங்களில் மேம்படுத்திடும் பொருட்டு, அரசின் பல்வேறு திட்டங் களின் கீழ் சிவகங்கை மாவட்டத்தின் கடைகோடி பகுதியில் வசிக்கும் மக்களின் தேவைகள் அறிந்து அவர்களின் கோரிக்கை களுக்கு முன்பாகவே, பல்வேறு வளர்ச்சி பணிகள் மாவட்டம் முழுவதும் மேம்படு த்தப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.25 இலட்சத்திலிருந்து படிப்படியாக உயர்த்த ப்பட்டு தற்போது ரூ.03.00 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி, திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி க்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழும் மற்றும் அரசின் பல்வேறு திட்டங்கள் வாயிலாகவும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவுற்ற திட்டப்பணிகள் அனைத்தும் பொதும க்களுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு தொடர்ந்து நடைபெற்று, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.

அதன்படி, இன்றைய தினம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் Phase-III 2025- 2026ன் கீழ் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சதுர்வேதமங்கலம் ஊராட்சி வாடத்திப்பட்டி கிராமப் பகுதியில் ரூபாய் 35.57 இலட்சம் மதிப்பீட்டில் திண்டுக்கல் - காரைக்குடி சாலை முதல் வாடத்திப்பட்டி சாலை வரையும், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முசுண்டப்பட்டி ஊராட்சி பகுதியில் ரூபாய் 48.13 இலட்சம் மதிப்பீட்டில் திருமலைக்குடி மாவட்ட எல்லைச் சாலையும், மேலவண்ணாரிருப்பு ஊராட்சி பகுதியில் ரூபாய் 199.60 இலட்சம் மதிப்பீட்டில் உரத்துப்பட்டி சாலை முதல் கீழவண்ணாரிருப்பு சாலை வரையும் என மொத்தம் ரூபாய் 283.3 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சாலைகள் அமைப்ப தற்கான பணிகளும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், கல்லல் ஊராட்சி ஒன்றியம், குன்றக்குடி ஊராட்சிக்குட்பட்ட சின்ன குன்றக்குடி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2025- 2026ன் கீழ் ரூபாய் 9.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலையரங்கமும், இன்றை யதினம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினராகிய எனது சார்பில் மேற்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாக மேற்கண்ட பணிகள் மட்டுமன்றி, திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 121 ஊராட்சிகளிலுள்ள 700க்கும் மேற்பட்ட கிராமங்களிலும் மற்றும் 6 பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும், அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, எனது சொந்த நிதியின் கீழும் கடந்த நான்கரை ஆண்டுகளில் பொதும க்களுக்கு பயனுள்ள வகையில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்னும் கூடுதல் தேவைகள் இருப்பின், அக்கோரிக்கைகள் மீது அரசின் திட்டங்கள் வா யிலாகவோ அல்லது எனது சொந்த நிதியின் வாயிலாகவோ உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், உதவி இயக்குநர் (ஊராட்சிகள் (ம) தணிக்கை) (மேற்கு) கு.ரவி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காதர் முகைதீன், முனியரசு, புவனேஸ்வரன், இலட்சும ணராஜு, உதவிப்பொறியாளர்கள் சையது இப்ராஹிம், மஞ்சுபாரதி, உதவி செயற்பொறியாளர் குமரவேல், இளநிலை பொறியாளர் வசந்தா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# கவுரிவாக்கத்தில் 50க்கும் மேற்பட்ட கல்லூரி பேராசியர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்

தாம்பரம், ஜன.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த கௌரிவாக்கத்தில் உள்ள அரசு உதவிபெறும் கல்லூரியில் பணியாற்றிவரும் உதவிப் பேராசிரியர்கள் மற்றும் இணைப்பேராசிரியர்கள், அவர்களுக்குண்டான பணி உயர்வு ஆணைகளைப் பெற்றும், அதற்குண்டான பணப்பலனை தமிழக அரசு இதுநாள்வரை வழங்கவில்லை என கூறி 50க்கும் மேற்பட்ட பேராசியர்கள் கல்லூரி வளாகத்திற்குள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகம் முழுவதும் சுமார் 200க்கும் மேற்பட்ட தனியார் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசியர்கள் பதவி உயர்வு பெற்றும், அதற்கான பணபலன்களை வழங்கப்படாமல் கடந்த 8 ஆண்டுளாக தமிழக அரசு நிலுவயில் வைத்திருப்பதாகவும், இதனால் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேராசியர்கள் பாதிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டி தமிழக அரசுக்கு எதிராக கோஷஙகளை எழுப்பினர்.

இது குறித்து பேராசியர்கள் கூறுகையில் சம்பள உயர்வையும், நிலுவைத் தொகையினையும் உடனே வழங்கிட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்



# திண்டுக்கல் ஆயுதப்படை மைதானத்தில் காவலர்கள் உடற்தகுதி தேர்வு DIG ஆய்வு

திண்டுக்கல், ஜன.23-

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் நடத்தும் 2025ம் ஆண்டிற்கான இரண்டாம் நிலை காவலர், சிறைகாவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை காவலர் பணி யிடங்களுக்கு தேர்வான விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் உடற்தகுதி தேர்வு வியாழக்கிழமை திண்டுக்கல், சீலப்பாடி ஆயுதப்படை மைதானத்தில் திண்டுக்கல், தேனி மாவட்டத்தை சேர்ந்த 380 பேருக்கு நடைபெற்றது.

இதில் சான்றிதழ் சரிபார்ப்பு, எடை, உயரம் மற்றும் மார்பு அளவு அளத்தல், 1500 மீட்டர் ஓட்டம் நடைபெற்றது.

இந்த உடற்தகுதி தேர்வை திண்டுக்கல் சரக. டிஐஜி சாமிநாதன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் ஆகியோர் ஆய்வு செய்தனர் .

# பழனி அருகே சாதியின் பெயரை சொல்லி தாய் மற்றும் மகன் மீது கொடூரத் தாக்குதல்

திண்டுக்கல், ஜன.23-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த பெரிய மொட்டுனுத்து என்ற கிராமத்தில் மாரிமுத்து என்பவரின் மனைவி தெய்வானை மற்றும் அவரது மகன் மாயகிருஷ்ணன் ஆகியோர் வசித்து வருகின்றனர்..

தொடர்ந்து அப்பகு தியில் நடு இரவு நேரத்தில் வசந்த், மற்றும் துர்க்கைராஜ் ஆகிய இருவரும் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் அருந்ததியினர் குடியிருப்பு பகுதிக்குள் புல்லட்டில் வந்து வெடிவைத்து புல்லட்டில் இருந்து அதிகப்படியான ஒலியை எழுப்பியுள்ளனர்.

சத்தம் தங்க முடியமல் வீட்டை விட்டு வெளியே வந்த தெய்வானை அவரது மகன் மாயகிருஷ்ணன்



இருவரும் ஏன் இப்படி செய்கீர்கள் என்று கேள்வி கேட்ட நிலையில் தெய்வானை மற்றும் அவரது மகன் மாயகிருஷ்ணன் ஆகிய இருவரையும் சாதியின் பெயரை சொல்லி கொடூரமாக தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். மேலும் இருவரையும் சரமாரியாக தாக்கி விட்டு புல்லட்டில் அத்தெருவின் வழியாக வலம் வந்து சென்றுள்ளார்கள். தொட ர்ந்து படுகாய ங்களுடன் காணப்பட்ட இருவரையும் சிகிச்சை க்காக பழனி அரசு மருத்துவமனையில் அனுமதித் துள்ளனர்.

மேலும் தெய்வானை நெஞ்சு வலியின் காரணமாக வலி தாங்க முடியாமல் துன்பப்பட்டு வருகின்றார். விரைந்து வந்த சாமிநாதபுரம் காவல் துறையினர் இந்நிகழ்வு பற்றி விசாரித்துள்ளனர்.

இச்சம்பவம் வைரலாக பரவவே தமிழ் புலிகள் கட்சியின் மாவட்ட செயலாளர் இரணியன் மற்றும் கார்த்திக் சுதன், விஜய் பெருமாள், சிவமணி, சந்தோஷ், குருநாதன், பாராளுமன்ற தொகுதி செயலாளர் தர்மராஜ் மற்றும் லட்சுமணன், இந்திய குடியரசு கட்சியின் மாவட்ட தலைவர் ஆறுமுகம் இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் சிவராஜ் துணை செயலாளர் குமரேசன் உள்ளிட்டோர் விரைந்து வந்து இந்நிகழ்வு பற்றி விசாரணை செய்து வருகின்றனர். தொடர்ந்து சாதியின் பெயரால் கொடூர தாக்குதல் நடத்திய வசந்த் மற்றும் துர்க்கை ராஜ் ஆகியோர் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று அனைத்து கட்சி நிர்வாகிகளும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தொடர்ந்து பழனி சுற்றுவட்டார பகுதியில் அடிக்கடி சாதியின் பெயரால் கோரத்தாண்டவம் நடைபெற்று வருவது தொடர் கதையாகி வருகின்றன.

# திருப்பூர் மாவட்டம்: அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ் வீட்டுமனைப்பட்டாக்களை வழங்கினார்கள்




திருப்பூர், ஜன.23-

திருப்பூர் மாவட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் தார நுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஃபெலிக்ஸ் ராஜா அவர்கள் தலைமையில், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.இ.பிரகாஷ் அவர்கள் முன்னிலையில் இன்று (19.01.2026) திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்திற்குட்பட்ட மூலனூர், கன்னிவாடி, முளையாம்பூண்டி ஆகிய பகுதிகளை சார்ந்த 164 பயனாளிகளுக்கு மூலனூர் பேரூராட்சி, அண்ணா நகர், சந்தை வளாகத்தில் வருவாய்த் துறையின் சார்பில் ரூ.83.26 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டுமனைப்பட்டாக்களை வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப்பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டவுடன் விடியல் பயணத்திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்கள் கடன் தள்ளுபடி, விவசாயக்கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக்குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், புதுமைப்பெண் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, வருமுன் காப்போம் திட்டம்,

மக்களை தேடி மருத்துவம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், கலைஞரின் கனவு இல்லம், உங்களுடன் ஸ்டாலின், நலன் காக்கும் ஸ்டாலின், தாயுமானவர் திட்டம், அன்புக்கரங்கள் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், மூலனூர், கன்னிவாடி, முளையாம்பூண்டி ஆகிய பகுதிகளை சார்ந்த 164 நபர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது.. முடித்தளவு புறம்போக்கு இடங்களையெல்லாம் தேர்வு செய்து முதல் கட்டமாக பட்டா வழங்கப்பட்டு வருகிறது. உங்களுடைய ஆதரவோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக வருவார். தொடர்ந்து பட்டாக்கள் வழங்கி வீடு கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக தமிழ்நாட்டில் தருமபுரியில் மகளிர் சுயஉதவிக்குழு என்ற உலக அளவில் மகளிருக்கான ஒரு அமைப்பை உருவாக்கி அவர்கள் தங்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்தி சொந்த காலில் நிற்பதற்கான வாய்ப்பை உருவாக்கினார்கள். நீண்ட நாட்களாக காத்திருந்த விவசாயிகளுக்கு பம்பு செட்டுக்கான மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

கல்வியில் மற்ற மாநிலங்களை காட்டும் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு மற்ற மாநிலங்களை காட்டிலும் பொருளாதார சிறந்த மாநிலமாக விளங்கி வருகிறது. மேலும் பல்வேறு சிறப்பான திட்டங்களை வழங்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக வர நீங்கள் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்

அந்த வகையில் இன்றைய தினம், வருவாய்த் துறையின் சார்பில்மூலனூர், கன்னிவாடி, முளையாம்பூண்டி ஆகிய பகுதிகளைசார்ந்த 164 பயனாளி களுக்கு ரூ.83.26 இலட்சம் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. தாராபுரம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 07.05.2021 முதல் இதுவரை 3,081 நத்தம் பட்டாக்களும், 4761 இபட்டாக்களையும், 778 நகர்புற நில பட்டாக்களும், கிராம கணக்கில் மாறுதல் 4,160 பட்டாகளும் என மொத்தம் 12780 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் 07.05.2021 முதல் இதுவரை 13,483 நத்தம் பட்டாகளும், 19,355 இபட்டாகளையும், 1,687 நகர்புற நில பட்டாகளும், கிராம கணக்கில் மாறுதல் 23,611 பட்டாகளும் என மொத்தம் 58,136 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருவாய் துறையின் சார்பா இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். இலவச வீட்டு மனை பட்டாக்கள் மட்டும் இல்லாமல் ஏற்கனவே குடியிருக்கும் கூடிய வீடுகளுக்கு பட்டா இல்லாதவர்களுக்கும் பட்டா வழங்க முன்னுரிமை அளிக்கப்படும் என்ற அடிப்படையில் நகராட்சி, பேரூராட்சி பகுதிகளிலும் பட்டா வழங்கும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தாராபுரம் நகராட்சி பகுதியில் ஏறத்தாழ 600 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் நீண்ட நாட்களாக தொடர்ந்து 32 நபர்கள் பட்டா கேட்டு விண்ணப்பம் அளித்த வர்களுக்கு இன்றைய தினம் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

தாராபுரம் பகுதிக்கு அரசு கலைக் கல்லூரி, மருத்துவமனை, சார் பதிவாளர் அலுவலகம், அறிவு சார்ந்த மையங்கள், சாலை பணிகள் போன்ற திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டம், தாயுமானவர் திட்டத்தின் மூலமாக அத்தியாவசியப் பொருட்கள் 65 வயசுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் வீடு தேடி வரும் திட்டம் போன்ற திட்டங்கள் மிக சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். இன்றைய தினம் 164 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பட்டாக்கள் வழங்க அனைத்து முயற்சியும் எடுக்கப்பட்டு வருகிறது . மேலும் கலைஞர் கனவு இல்லம் திட்டதின் மூலம் வருடத்திற்கு ஒரு லட்சம் வீடு கட்டப்பட்டு வருகிறது. மேலும், பொது மக்களின் பிரச்சனைகளை தெரிந்து சிறப்பான ஆட்சியை தந்து கொண்டு இருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக நீங்கள் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள் கிறேன். இவ்வாறு மாண்புமிகு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் வருவாய்த் துறையின் சார்பில் மூலனூர் பகுதியை சாரந்த 77 பயனாளிகளுக்கும், கன்னிவாடி பகுதியை சாரந்த 26 பயனாளிகளுக்கும், முளையாம்பூண்டி பகுதியை சாரந்த 61 பயனாளிகளுக்கும் என மொத்தம் 164 பயனாளி களுக்கு ரூ.83.26 இலட்சம் வீட்டுமனை ப்பட்டாக்கள் வழங்கினார்கள். முன்னதாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், மூலனூர் ஊராட்சி ஒன்றியம், கிளாங்குண்டல் ஊராட்சி, பட்டுத்துறையில் மாநில அரசு நிதியின் கீழ் ரூ.4.01 கோடி மதிப்பீட்டில் மூலனூர் ஸ்ரீ சின்னியக்கவுண்டன்வலசு சாலை வழியில் கிளாக்குண்டல் மூலக்கடையில் ஏற்கனவே உள்ள தாம்போகிக்கு பதிலாக உயர் மட்ட பாலம் கட்டும் பணியினை துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் திரு.இல.பத் மநாபன், உதவி கோட்டப் பொறியாளர் (நெடுஞ் சாலைத்துறை) திருமதி பிரதீபா, உதவி பொறியாளர் திரு.சசிகுமார், மூலனூர் பேரூராட்சி த்தலைவர் திரு.மக்கள் தண்டபாணி, கன்னிவாடி பேரூராட்சித்தலைவர் திருமதி ரேவதி சுரேஷ், தாராபுரம் வட்டாட்சியர் திரு.இராமலிங்கம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## திருப்பூர் மாவட்ட ஆட்சியாளர் தகவல் குடியரசு தினமான அன்று கிராம சபைக் கூட்டம் பொது இடங்களில் நடைபெறும்

திருப்பூர், ஜன.23-

திருப்பூர் மாவட்டம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) திருப்பூர் வடக்குக்குட்பட்ட 125 கிராம ஊராட்சிகளிலும், குடியரசு தினமான 26.01.2026 அன்று காலை 11.00 மணியளவில் கிராம சபைக் கூட்டம் அந்தந்த கிராம ஊராட்சிகளின் பொது இடங்களில் நடைபெறும்.

கிராம சபைக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்படும்.

கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல்.

கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை

கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்

மக்கள் திட்டமிடல் இயக்கம் (people's plan campaign) மூலம் 2026- 2027 ஆம் நிதியாண்டிற்கான கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் பெறுதல்.

தொழிலாளர் வரவு செலவு திட்டம்

தொழிலாளர் வரவு செலவு திட்ட பணிகள்

நலிவு நிலை குறைப்பு நிதி

தூய்மை பாரத இயக்க (ஊரகம்)திட்டம்

ஜல் ஜீவன் திட்டம்

சிறு பாசன ஏரிகள் புதுப்பித்தல் குறித்த விவரம்


தொகுதி மேம்பாட் டுத்திட்டம்

இதர பொருட்கள்.

திருப்பூர் மாவட்டம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) திருப்பூர் வடக்குக்குட்பட்ட 125 கிராம ஊராட்சிகளிலும் மேற்படி கூட்டப்பொருட்கள் குறித்து, 26.01.2026 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

கிராம சபைக் கூட்டத்தை திறம்பட நடத்திட ஏதுவாக ஒவ்வொரு ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றிய அலுவலகத் திலிருந்து பற்றாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, கிராம பொது மக்கள் மேற்படி கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு மேற்காணும் பொருள்கள் மற்றும் அந்தந்த கிராம ஊராட் சிகளின் வளர்ச்சிக்காக தெரிவிக்க விரும்பும் நல்ல ஆலோசனைகள் குறித்தும் விவாதித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தெரி வித்துள்ளார்கள்.

## அரசனூர் ஊராட்சி திருமாஞ்சோலை வாரச்சந்தை ஏலம்



சிவகங்கை, ஜன.23-

சிவகங்கை மாவட்டம் அரசனூர் ஊராட்சி திருமாஞ்சோலை கிராமம் என்பது மதுரை தொண்டி தேசிய நெடுஞ் சாலையில் அமைந்துள்ள முக்கிய ஊராகும், இந்த ஊரைச் சுற்றி அதிமான கிராமங்கள் , குறிப்பாக தானைத்தலைவர் நிறுவிய தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் , குறிப்பாக இந்தோ திபெத்தியன் பயிற்சி பட்டாலியன்களுக்கான மையம், தனியார் தொழில் நிறுவனங்கள் , மற்றும் கல்லூரிகள் என ஆயிரக்கணக்கில் வந்து செல்லும் இடமாக இந்த திருமாஞ்சோலை திகழ்கிறது.

அப்போதைய ஊராட்சி மன்றத் தலைவராக திமுகவைச் சேர்ந்த மாவட்ட நிர்வாகி, பட்டதாரி இளம் பெண் செல்வராணி அய்யப்பனின் பெருமுயற்சியால் சிவகங்கை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ரூபாய் 42 லட்சம் மதிப்பீட்டில் வாரச்சந்தையை ஏற்ப டுத்தி அதனை தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அதனை திறந்து வைத்தார்...

இந்நிலையில் சிவகங்கை ஊராட்சிக்கு வருவாயை அதிகரிக்கும் பொருட்டும், அடிப் படை வசதிகள் கூடுதலாக கிடைக்க வாய்ப்புகள் உள்ளதை உறுதிப்படுத்திடவும் சிவகங்கை ஊராட்சி ஒன்றியம் பிரதி சனிக்கிழமை நடைபெறும் இந்த வாரச்சந்தையை குத்தகைக்கு விடுவதாக அன்மையில் அறிவிப்பு செய்திருந்தது...

அதனடிப்படையில் சிவகங்கை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் உள்ளிட்ட அலுவலர்கள் முன்னிலையில் ஏலம் விடப்பட்டு இறுதியில் 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது.

இருபது நபர்களுக்கும் மேற்பட்டோர் இந்த ஏலத்தில் கலந்து கொண்டதால் கடும் போட்டி நிலவியதையடுத்து இறுதியில் அரசனூரைச் சேர்ந்த திமுக பிரமுகர் ம.அய்யப்பன் பெயரில் ஏலம் முடிவடைந்தது.

இவர் இதே அரசனூர் ஊராட்சி மேனாள் தலைவர் செல்வராணி என்பவரின் கணவர் ஆவார்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய ஊராட்சி முன்னாள் தலைவர் , சிவகங்கை திமுக மாவட்ட மகளிரணி நிர்வாகியுமான , எம்எஸ்சி பிஎட் முதுகலைப் பட்டதாரியான செல்வராணி அய்யப்பன் எங்களது ஊராட்சி தேசிய அளவில் சிறந்த ஊராட்சியாக முதலிடமாகவும், பள்ளியும் சிறந்த பள்ளி எனவும் அவார்டு பெற்றுள்ளோம் , சிவகங்கை மாவட்டத்தில் இரண்டாம் இடமாக தேர்வு செய்யப்பட்டு பரிசு மற்றும் விருதுகளைப் பெற்றிருக்கிறோம் , மேலும் எங்களது ஊராட்சியில் அஞ்சல் அலுவலகம், வங்கிகள், இப்படி எங்கள் ஊராட்சியானது ஒரு தன்னிரைவு பெற்ற ஊராட்சியாக விளங்கி வருகிறது...

எனவே இந்த வாரச்சந்தை குத்தகையை நாங்கள் லாப நோக்கமாக சிந்திக்காமல் பொதுமக்களின் நலன் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு இவ்வளவு கடும் போட்டியிலும் எடுத்திரு க்கிறோம் , அரசனூர் ஊராட்சி பொதுமக்களின் ஒத்துழைப்போடும், வியாபா ரிகளின் நன்மையைக் கருதியும் மட்டுமே இதை எடுத்துள்ளோம் எனவும் தெரிவித்தார்...

## பிராங்க்ளின் டெம்பிள்டன் நிறுவனத்தின் நாடு தழுவிய “சேஞ்ச் தி சோச் பிரச்சார பயணம்




மதுரை, ஜன.23-

பிராங்க்ளின் டெம்பிள்டன் இந்தியா நிறுவனம் "சேஞ்ச்தி சோச் என்ற கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை யிலான நாடு தழுவிய பிரச்சார பயணத்தை தொடங்கியுள்ளது.

பிராங்க்ளின் டெம் பிள்டன் இந்தியாவின் தலைவர் அவினாஷ் சத்வலேகர் நிதி அறிவு மற்றும் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்காகவும், இந்தியாவில் 30 ஆண்டுகளை நிறைவை கொண்டாடும் வகையில், கன்னியாகுமரியில் தொடங்கி 21 நகரங்களை கடந்து ஜம்மு ஸ்ரீ நகரில் 30 வது நாள் 4000+ கிமீ தூரம் சென்று பயணம் முடிவடைகிறது.

ஆயிரக்கணக்கான இந்தியர்கள் தங்கள் நிதி எதிர்காலத்தைத் தாங்களே பொறுப்பேற்றுக் கொள்ளும் நம்பிக்கையை இந்தப் பயணம் ஏற்படுத்துகிறது. பிராங்க்ளின் டெம்பிள்டன் இந்தியாவின் தலைவர் அவினாஷ் சத்வலேகர் கூறுகையில் : இந்தப் பயணம் நாடு முழுவதும் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்தவும், நகரம் மற்றும் கிராமங்களில் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த பெண்களுக்கு கல்வி பயிலரங்களை நடத்துகிறோம். சேமிப்பு, முதலீடு, மற்றும் வாழ்க்கை இலக்குகளை அடைய நீண்டகாலச் செல்வத்தை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறோம். குறிப்பாக மீனவ சமூகம்,விவசாயிகள்,பள்ளி கல்லூரி ஆசிரியர்கள்,ஆசிரியர்கள் உதவி குழுவினர், ராணுவம், தனியார் மற்றும் அரசு துறையில் பணிபுரிவோர் என அனைவரையும் இந்த முன் முயற்சியில் பங்கேற் பாளராக ஈடுபடுத்த உள்ளோம்.பெண்கள் நிதி முடிவுகளை எடுக்கும்போது குடும்பங்கள் வலிமை பெறுகின்றன. சமூகங்கள் செழிக்கின்றன,நாட்டின் வளர்ச்சி அதிகரிக்கிறது.

பிராங்க்ளின் டெம்பிள் டனின் இந்த பயணம் 2047 ஆம் ஆண் டுக்குள் விக்சித் பாரதம் (வளர்ச்சியடைந்த நாடு) என்ற இந்தியாவின் இலட்சியத்தை நோக்கிய ஒரு முக்கிய படியாகும் எனவும் கூறினார்.



## பூவிருந்தவல்லி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் தலைமையில் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழிப்புணர்வு

சென்னை, ஜன.23-

தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை சார்பில் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழா தமிழகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக 2026, தேசிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பூவிருந்தவல்லி வட்டார போக்குவரத்து அலுவலர் தலைமையில் வாகன ஆய்வாளர் பூர்ணலதா முன்னிலையில் நடைபெற்றது. இதில் இருசக்கர வாகனத்தில் செல்லும் பொழுது ஹெல்மெட் கட்டாயம் அணிய வேண்டும் குடிபோதையில் வாகனம் ஓட்டக்கூடாது நான்கு சக்கர வாகனத்தில் செல்லும் பொழுது கட்டாயம் சீட் பெல்ட் அணிய வேண்டும் என்று வாகன ஓட்டிகளுக்கு வலியுறுத்தப்பட்டது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வின் போது போக்குவரத்து உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மதுரையில் சைவ சித்தாந்த பெருமன்றத்தின் பன்னாட்டு கருத்தரங்கம்



மதுரை, ஜன.23-

மதுரை நாகமலை புதுக்கோட்டை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் சைவ சித்தாந்த பெருமன்றத்தின் பன்னாட்டு கருத்தரங்கம் ஜனவரி 23,24,25 ஆகியமூன்று நாட்கள் நடைபெற உள்ளது. முதல் நாள் தொடக்க விழாவில்ஓய்வு பெற்ற நீதியரசர் ஜெகதீசன், வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியின் முதல்வர் ராஜேஸ்வரா பழனிச்சாமி கல்லூரியின் முதல்வர்கோடீஸ்வரன், துணைத் தலைவர் பாண்டியன்,மயிலம் பொம்மபுர ஆதீனம் 20வதுகுரு சிவஞானபாலய சுவாமிகள்,பொன்னம்பல அடிகளார் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 46 வது குரு,மருதாச்சலம் அடிகளார் பேரூர் ஆதீனம் 25வது குரு,ஆகியோர் வாழ்த்துரை வழங்கி சைவ மதத்தின் வரலாற்று போக்குவரத்து நூல் வெளியீடுசிறப்புரையாக மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன்

இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் சிறப்பு கருத்தரங்கம்மற்றும் ஆகமங்கள் வரலாறு வழிபாடு நூல் வெளியீடு தலைமை செல்லூர் ராஜு மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இராஜன் செல்லப்பா திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்வரலாற்று துறை பேராசிரியர் கலா ராணி சீலா ரமணன் திருநாவுக்கரசு சிறப்புரை ஆர்பி உதயகுமார்விழாவிற்கு நன்றி உரை அன்சாரி முதுகலை மற்றும் ஆராய்ச்சி வரலாற்று பேராசிரியர்மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக சோமசுந்தர நாயகரின் சமரச ஞான தீபம் நூல் வெளியீடுவிழாவிற்கு வரவேற்புரை தட்சிணா மூர்த்தி செயலாளர் சைவ சித்தாந்தம் அறிமுக உரை நல்லூர் சரவணன் தலைவர் சைவ சித்தாந்த பெருமன்றம் மூத்த வழக்கறிஞர் சிங்காரவேலன்,நிறைவு விழாவிற்கு ருக்மணி பழனிவேல் ராஜன் மீனாட்சி அம்மன் திருக்கோயில் அறங்காவலர் சிறப்புரையாற்றுகிறார், சிறப்பு அழைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் கன்னியாகுமரி தொகுதி விஜய் வசந்த் ஆகியோர்விழாவினை சிறப்பிக்க உள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161